[1970 மார்ச் 13

ஆர். பாலக்குறிச்சிப் பகுதிக்குப் பாசன வசதிகள்

*359 வினு.—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கிழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருமயம் தொகுதியிலுள்ள ஆர். பாலக்குறிச்சிப் பகுதியில் அமைந்துள்ள பேயன் ஊற்றையும், சக்கம்மா கேணியையும் சீர்படுத்தி பெருமளவில் வேளாண்மைக்குப் பயன்படுத்தச் செய்யும் திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) இன்றெனில், உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) திருமயம் வட்டம், ஆர். பாலக்குறிச்சிப் பகுதியில் மண் குரம்புக்குப் பதிலாக பேயனூத்துவாரிக்குக் குறுக்கே அணைக்கட்டு கட்டும் செயற்குறிப்பு ஒன்று உள்ளது. சக்கமா கேணியைச் சிரமைப்பது தேவையில்லை எனத் தெரிவதால், அக் கேணியை மேம்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

புலவர் பொ. பொன்னம்பலம் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேயன் ஊற்றுத் திட்டம் எப்பொழுது தொடங்கி நிறைவுறும் என்பதை அறிவிக்க இயலுமா என்று அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தத் திட்டம் குறித்தும், உணவு உற்பத்தி மதிப்புக் குறித்தும், மாவட்ட ஆட்சித் தலைவரின் இசைவுக்காக நிர்வாகப் பொறியாளர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எழுதியிருக்கிறுர். மாவட்ட ஆட்சித் தலைவரின் இசைவைப் பெற்ற பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாநிலங்களுக்கிடையே பேருந்துப் பணி

*360 வினு.—திரு. டி. மார்டின் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கிழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையையும் திருவனந்தபுரத்தையும் இணைக்கும் வகையில் மாநிலங்களுக் கிடையே வசதியான பேருந்துப் பணி ஒன்றைத் தொடங்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதுகுறித்த விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) வினுவிற்கு இடமில்லை.

திரு. டி. மார்டின் : மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார், தற்சமயம் சென்னைக்கும் திருவனந்தபுரத்திற்கும் போக வேண்டிய பிரயாணிகள் ரயிலில் மிகவும் கஷ்டப்பட்டு நின்று கொண்டு பிரயாணம் செய்ய

1970 மார்ச் 13]

வேண்டிய நிலைமை இருப்பதனால், அதை மனதில் கொண்டு, நதிநீர் பங்கீட்டில் எப்படி சுலபமாக பிரச்னையைத் தீர்த்து வைத்ததோ தமிழக அரசு அதே போன்று, கேரள சர்க்காருடன் பேசி, இந்தப் பிரச்னைக்கு முடிவு கண்டு டீலக்ஸ் பஸ் விடுவதற்கு இனிமேலாவது இந்த அரசாங்கம் முயற்சி மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சென்னைக்கும் திருவனந்தபுரத்திற்கும் இடையே தூரம் 470 மைல், பிரயாண நேரம் 20 மணி என்று சொல்லப்படுகிறது. தற்பொழுது இது பற்றிய செயற்குறிப்பு ஒன்றுமில்லை. கனம் உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்தை மனதில் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : சென்னைக்கும் நாகர்கோவிலுக்கும் இப்பொழுது நேராக பஸ்போக்குவரத்து இல்லை. திருச்சியில் இறங்கி, இன்னொரு பஸ்ஸில் செல்ல வேண்டியிருக்கிறது. ஏற்கனவே இருந்த அரசு சென்னைக்கும் நாகர்கோவிலுக்கும் ஒரே பஸ், அதுவும் வசதி நிறைந்த பஸ் விடுவது என்று ஒரு திட்டம் வைத்திருந்தது. அந்தத் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது. இந்த அரசு அதை நிறைவேற்றுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதைப்பற்றிய தகவல் என்னிடம் இல்லை. ஆனாலும், கனம் உறுப்பினரின் கேள்வி கவனத்தில் கொள்ளப்படும்.

காஞ்சிபுரத்துக்குப் பேருந்து வசதிகள்

*361 வினா.—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்ட தலைநகர் காஞ்சிபுரத்திற்கு மாற்றப்பட்டு விட்டதால் மாவட்டத்திலுள்ள பல ஊர்களிலிருந்து போதுமான பஸ்கள் விட உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : செங்கற்பட்டு மாவட்டத் தலைமையிடத்தைக் காஞ்சிபுரத்துக்கு மாற்றிய பிறகு, தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை காஞ்சிபுரத்துக்கும் காஞ்சிபுரம் வழியாகவும் மூன்று புதிய வழித்தடங்களை இயக்குகிறது. அத்துடன் தனியார் பேருந்து முதலாளிகள் மூவர் காஞ்சிபுரத்தைத் தொட்டுச் செல்கிற வகையில் மூன்று வழித்தடங்களில் பேருந்துகள் விடுகின்றனர். இவையன்றி, மேலும் பதினொரு வழித்தடங்களுக்கு தனியார் பேருந்து முதலாளிகளுக்கு அனுமதிச் சீட்டுகளை வழங்குவது பற்றி போக்குவரத்து ஆணையாளர் ஆலோசித்து வருகிறார்.